# குரு கீர்த்தனம்



## அமரர். உயர்திரு. சி. குருநாதன்

[சிரேஸ்ட ஊடகவியலாளர்]

அவர்களின் 31ம் நாள்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மனமது உருகிட மலரும்
## காணிக்கை

அர்த்தம் மிகு வாழ்வில்
நித்தமது நிலையாகி
பற்றதில் மலர்ந்து
மனமது பரந்து
உற்றவர் அன்பர்
உறவினர் யாவரிலும்
உயர் நினைவாகி
அன்பு பாசம் பண்போடு
அறிவாற்றல் கொண்டு
பலர் அன்பின் படர்வில்
பிணைவாகிப் பெரிதே
பிறர்க்காயும் மனமது
கொண்டே நிலைநின்ற
பாசத் திருமகனார்எம்
தந்தை நினைவதில்
நனையும் இதயமுடன்
தந்தோம் ...........
குரு கீர்த்தனம்

- குடும்பத்தார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதாமடி
**11.08.1938**

மகேசன் அடி
**01.09.2017**

# அமரர்
# திருவாளர் சின்னையா குருநாதன்

## திதிவெண்பா

**இனியருல் ஏவிளம்பி இயல்பிடும் ஆவணியில்
புனித நல் பூர்வபட்ச தசமியில் – துணிந்தநல்
சின்னையா குருநாதன் சிவன்ந்திருப் பாதம்தன்னில்
தன்னிலை அடைந்தார் காண்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பார் பிறப்பறியார் இறப்பும்
தாமறியார் இருப்பார் இருப்பை
பிறர்க்கும் இருப்பாக்கி இருப்பார்
இருப்பார் இறப்பால் இறக்கார்.

– அக்கினி வண்ணன் –

பொது நூலகம்,
நகராட்சி மன்றம், திருகோணமலை

Public Library,
Urban Council, Trincomalee



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச தோத்திரங்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

மண்ணுலக கத்தினிந் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்ற டியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலவர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கடையவனே னைக் கருணையி
னாற் கலந்தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டர்ய்விறல் வேங்கையின்றோல்
உடையவனே கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்
பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

சொல்லாணட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாளே
உத்தமா தான சற்குண நேயா
ஒப்பிலா மாமணித் திரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிய திருமனதார் பாசம்மிகு நாதர் எங்கள் மனக்கோவில் நிதமானாரின் குரு கீர்த்தனம்

பூமிமாதா மேவிய எழில்
மேவிப்படர்ந்த
குவலயம் எனும்
தரைதனில் நிகரிலா
சுந்தரம் நிறைமிகு
பூந்தளிர் நீர்சூழ்
ஈழத்திரு நாடுஎம்
இலங்கை அகிலமதில்
பெரும் தேசமது
எம் சொத்து

மா இலங்கைதனில்
பேர்எழில் பெருமை
சேர்வள உயர்
திருக்கோணமலை
அடிக்கொரு லிங்கம்
ஆனதான மண்
ஆலயமது மலை
தாங்கும் கைலாசம்
வனமது வளமாகும்
மானோடும் மயிலாடும்
மந்திகள் கூத்தாடும்
முக்கண்ணணார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் பாலிக்கும்
பக்தி பெருக்கது
நித்தம் சொரிவாகும்
திருக்கோணமலை
இன்னும் கன்னியா
குளக்கோட்டன் கட்டுக்
குளமது கந்தளாய்
கடல்வளம் வயல்லோடு
புகழ்சேர் பூமியதன்
நகரமதில் நல்மனதார்
செங்குந்தர் முதலியார்
மரபது வழி வழியே !
நந்திக் கோத்திரத்தில்
வந்துதித்த ஆறுமுகம்
சின்னையா பெருமகனார்
தந்தை தாய்தனின்
சொந்த விருப்புடன்
பந்தமதில் இணைந்தார்
செங்குந்தர் முதலியார்
நந்திக் கோத்திர
சுந்தர எழிலார்
இராசம்மா எனும்
அன்பகத்தார்தனை
சின்னையா மணந்தார்
தந்தை தாய் மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமனத் தம்பதியர்
சின்னையா இராசம்மா
இல்லமதில் இனிதேமகிழ
நல்லறம் நாளும் சிறக்க
கைலாச நாதன் கருணையது
தம்பதியர்க்கு தான்சேர
மழலைச் செல்வங்கள்
மனையதில் பெருகினர்பேறாய்
முன்னே முதல் முத்தாய்
கண்ணென அனார் மகளாய்
பெயரதுவோ ராஜேஸ்வரி
மகிழ்வதில் தம்பதியர்
தனிருக்க பின்னே
மகனாய் வந்துதித்தார்
அவர்தனுக்கோ பெற்றார்
பெயரது இட்டார்
குருநாதன் எனவே தான்

முன்னே அக்கா ராஜேஸ்வரி
பின்னே உதிரத்தார்
சகோதரர்கள் ஆனார்
தம்பிராசா, மகேஸ்வரி,
ராமச்சந்திரன், சண்முகலிங்கம்,
விஸ்வலிங்கம், அருந்தவம்,
தனலட்சுமி, அமிர்தலிங்கம்
பத்துமுத்துக் பெற்றத்தால்
பெற்றனர் பேரின்பம்
தம்பதியர் சின்னையா இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியமக்கள்தனை
கல்வியதில் இணைத்தார்.
மகனார் குருநாதர்தனை
நகரமதில் புனித சவேரியர்
பள்ளிதனில் முன் இணைத்தார்.
ஆர்வமுடன் கல்விதனில்
பற்றுடன் பயிலும் காலை
ஆண்டது இரண்டில்
ராமகிருஷ்ணர் மிசன்
இந்துக்கல்லூரியில்
ஆற்றல்மிகு மகனார்
குருநாதன் தனையே
ஆர்வமுடன் சேர்த்தார்
ஆசிரியர் போற்றுதலில்
உளம் மலர்ந்த குருநாதர்
ஆங்கில மொழி வழியே
உயர்கல்வி தான், கற்றார்

இளவயதில் பார்வையது
பற்றுடன் புரிந்து தெளிந்தார்
வித்தகம் மிகு விவேகத்துடன்
விரிந்த பார்வையில்
நாட்டின் நிலையுணர்ந்து
மக்கள் நீதி நியாயத்திற்கு
தக்க பார்வையில் தற்துணிவில்
சரியான நிலை கொண்டு
அரசியல் பார்வையில் விழிப்பானர்
இன்னாள்தனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் அறிவாற்றல்
தூரநோக்கு துணிவு
பன்முகப்பட்ட ஆற்றல்
நிறைவான வளமதால்
பத்திரிகைத் துறையதில்
பாதமதுபதித்தார் பெரிதே
தன் உயர்வுக்கு ஆளானார்

அன்னார் உயர்வு
பெருமை தனில்
பெற்றார் மகிழ்ந்து
பெருமதிம் ஆகும்
காலமது காலனது
கைபிடியில் தந்தையார்
சின்னையா தானும்
தானாகி சிவனார்
பாதமது சேர்ந்தார்

பத்திரிகைத் துறைதனில்
முன்னே வீரகேசரி
நிருபராய் நியமிக்க
பின்னே தினபதி,
சிந்தாமணி, உதயன்,
சஞ்சீவி, சூடாமணி,
தினக்குரல், சன்டேரைம்ஸ்
என்பன ஆற்றலுக்கு
தளமது தானாகி
வளரும் காலமதில்
தக்க வயது தான்சேர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையவர் உறவினர்
அன்னார் குருநாதனர்க்கு
தக்கதோர் மணமகளை
மிக்க ஆவலுடன் தேடுதலானார்
முன்னே இரு சகோதரிகள்
சகோதர் திருமணமாகினர்
தேடுதலில் தெரிவானார்
யாழ் நகரின் செங்குந்த முதலியார்
மரபுவழித்தோன்றல்
பொன்னுத்துரை அன்னலட்சுமி
தம்பதியர் தவப்புதல்வி
கல்வியங்காட்டு
நல்லிதய மங்கை
பேபிசரோஜா தனையே
கரம்பற்றினார் களிப்படைந்தார்
கணவன் மனைவி இருவருமே

மனையாளாய்ப் பிணைவான
பேபி சரோஜா தாய், தந்தை
மாமா, மாமியார் ஆனார் அவர்
பெற்றெடுத்தோர் இவர்க்கு
மைத்துனர், மைத்துனி
ஆகினர் மனம்மகிழ்ந்தார்
சந்தானலட்சுமி, சரோஜா,
கமலாதேவி, சிறிஸ்கந்தாராசா,
தேவராசா என்போர்
உறவதில் பெரிதே
பிணைவானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாதர் பேபிசரோஜா
பந்தமதில் இணைய
பேபிசரோஜா பெரிய
தந்தை தாயரான
சோமசுந்தரம் சந்தானலட்சுமி
தத்தமது செய்தே
தம்பதிகளாக்கினர்
சொந்தமெலாம் மகிழ்ந்தார்
இல்லற வாழ்வு இனிதே
மலர்ந்து பெரிதேஆகிட
கோணேசர், நல்லூர் கந்தன்
தன்னடி நிதம் தொழும்
தம்பதியர் குருநாதன்
பேபிசரோஜா
பெற்றனர் முன்னேதான்
பேரின்ப முத்தாய் மகனை
யெரது இட்டார் பிரதீபன் என
பேரெழில் மகனார் தனால்
பேரின்பம் பெற்றவர்க்கு
இன்னும் இறையருள் சேர
மகவாய் வந்தனள் அவர்க்கு
பிரசாந்தி எனப் பெயர்
இட்டார் மகிழ்ந்தார்
பேரின்ப பெருவாழ்வில்
நாளும் மகிழ்ந்திருக்க
உதயன் பத்திரிகைதனுக்கு
உதவியாசிரியர் ஆனார்.
இடமது பிரிவால் யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்தில் வாழ்விடமானார்
இருமகவு தனையும் அங்கு
யாழ் இந்துக்கல்லூரி,
யாழ் இந்து மகளீர் கல்லூரி தனில்
சேர்த்தே அவர் கல்விக்கு
ஆடித்தளமிட்டார்
வருடங்கள் பலவாக
பணியதில் முதல்மையாகி
நிலையுயர்வு பல துறை
ஈடுபாடு அனுபவம் தனில்
உயர்வான காலமதில்
பிறந்த இடமது
திருக்கோணமலைக்கே
வந்தே நிலையானார்
இரு மகவுகளையும்
பெரும் கல்விதனில் நிலையாக்க
தி/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி,
தி/சண்முகா இந்து மகளீர் கல்லூரிகளில்
இணைவாக்கினர்
அவர் வாழ்வின் உயர்வுக்கு
தம்பதியர் இருவரும்
என்நாளும் காப்பானார்கள்
பெற்றவர் பெரிதே ஆகி
கற்றதில் உயர்வோயாக
உற்ற உத்தியோகம் பெற
தக்க வயது வருந்திட்ட வேளை
அவர் வாழ்வு பெரிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறம் சேர்க்க நினைவானார்
நல்மன உயர்வுடை
மணமகள், மணமகன்
தேடினர் குருநாதனார்
அன்பு மகளாள பிரசாந்திக்கு
திருக்கோணமலைதனின்
நல்மனமானோர்
மகனார் உமேஸ்கண்ணாதனை
மணமகனாய் இணைத்தார்
மனமது மகிழ்வானார்
பின்னே தன் மகனார்க்கு
பிரியமான மாதுதனை
பிணைவாக்க பிரியமாகி
முத்துத்திருமாண்பூர் மூதூரின்
பத்தும்பல வளமும் நிறை
சம்பூரில் நற்குடி வேளார்
மரபுவழியது வந்தோர்
காளிராஜா மேனகா
தம்பதியர் தவப்புதல்வி
சங்கீதாதனை மருமகளாய்
மகிழ்வுடன் சேர்த்தார்
அன்பு மனவிரிவார்
குருநாதர் தம்பதியர்

மகனார் பிரதீபன்
மருமகளார் சங்கீதா
பெற்றெடுத்த பேரர்
இரத்த முத்துக்கள்
பெரிதே ஆனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அன்னார்
மடியது தவழ மகிழ்ந்தார்
மகனது மகவுகள்
மிதுபாஷினி, பபிஷன்
கீர்த்திஷன்
இவர்களால் இல்லம்
இன்பமதில் திகழ
மகளாள் பிரசாந்தி
மருமகன் உமேஸ்கண்ணா
பெற்றெடுத்தவர்கள்
பேரர்களானார் அன்னார்க்கு
கோஷிகா, அருன்கோபி,
ஹர்ஷினி
அகமது மகிழ்ந்து தானிருந்தார்
மகன் வழிவந்தோரர் தன்னால்
மனையாள் அன்பணைப்பில்
ஆற்றலோடு ஊடகத்துறை
செயலதில் போற்றுதலானார்

இன்னாள்தனில் இல்லாள்
பேபிசரோஜா தனை
இறைவன் தன்னடிசேர்க்க
தன்நிலை குலைந்தார் நாதர்.

அன்னார் துயர்தீர்த்தார்
மகவுகள் இருவரும்
பெற்ற பேரர்களால்
முன்னான அன்னாரின்
ஊடகத்துறைதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்தறிவு பார்வைவிரிவு
உற்று உணர்வு உளப்பாங்கு
உறுதிமிகு மனத்திடம்
நிலையது நிமிர்ந்தேயிருந்தார்
துணிவோடு பலதிறக்கும்
முகம் கொடுத்தார்
இறுதிவரை மக்கள்
உயர்வுக்கே தனது
உழைப்பது எழுத்துதனை
உயிர்ப்பாக்கி நின்றார்.

பிறர்க்கும் தானாகி
பிரியமாய் பலர்க்கும்
அன்பனாய் நண்பனாய்
அண்ணனாய் உறவுகளுக்கு
உற்ற பாசம் பற்றில்
ஊடகத்துறையில் பெரும்
பேரது பெற்ற பெரும்தகை
மூப்பதில் ஓய்வுதனை
நலன் காப்பில்
நாடியே தானிருந்தார்
நன்மதிப்பு மிகு மாமனிதர்
நாளும் நினைவாகி
நிதம் தொழும் கோணேசர்
விருப்பது கொண்டே
அன்னாரை தன்தாழில்
சேர்ப்பாக்கினார் குருநாதர்
திருமனதார் சேர்ந்தார்
இறைபாதம் 01.09.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருது வழங்கும் விழா




noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன்பிறப்பே உதிரமுத்தே

அற்புதப் பிறப்பே
அரும் பேறே
உடன் பிறப்பே
படர் பாசமதில்
மலர்ந்திருந்தோமே
அக்கா தம்பி
அண்ணா தங்கையென
நாளும் பிணைவில்
நாமிருந்தோமே
உங்கள் நினைவதுவோ
நெஞ்சை நெருடுகின்றது
அருமைப்பிறப்பே
ஆருயிர்கலப்பே
நின்தனது ஆத்மா
சாந்திபெற எங்கள்
வேண்டுதல் நாளும்
நிதமாகும் எம்பிறப்பே
சாந்தி சாந்தி சாந்தி

**வேதனையுடன்**
**வேண்டுதல் கொண்டோம்**

**- சகோதரர்கள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசத்தில் பரந்திட்ட நேசப் பூக்களே

மைத்துணராய்
நீங்கள் எமக்கு
கிடைத்தது பாக்கியமே
தங்கள் பிரிவதால்
அல்லலது கொண்டோம்
பற்றும் ஆதரவும்
பலதும் வழங்கி
உற்ற துணையாக
தானிருந்தீர்
பிரிந்தீர்
அதிர்கின்றது எமதுளம்
நித்தம் உங்கள்
ஆத்ம சாந்திக்கே - நாம்
வேண்டுதல் கொள்வோம்
சாந்தி பெறவே நாளும்
நாம் இறைஅடிதொழுவோம்
ஓம் சாந்தி சாந்தி

**- மைத்துணர், மைத்துணியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சமது நெருப்பாச்சு
## கண்களது கடலாச்சு

எம்முயிர்ப் பிதாவே
முன் கண்ட
தெய்வமே
முற்றுமாகி முளுதுமாகி
பெற்ற எமை
பற்றிப் பாசப்படர்வில்
பொத்திப் பொத்தி வளர்த்தீர்கள்
நித்தம் அன்புச் சிறகுள்
பத்திரப் படுத்தியே
காத்திருந்து எங்கள்
அத்தனைக்கும் ஆதாரமாய்
ஆன எமது பாசத்திரவியமே
பாரில் இனியுமை
பார்க்க முடியா
நிலையடைந்தோமே
நெஞ்சமது நெருப்பாச்சு
கண்களது கடலாச்சு
உங்கள் ஆத்மா சாந்திக்கு
வல்ல இறைவன் காலடி
வீழ்வதே எம் வாழ்வது ஆகும்.

சாந்தி சாந்தி சாந்தி

- மக்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமது உடைந்தோம்
## தினமது துயரே


எமை என்றும்
உங்களது பிள்ளைகளாய்
தங்கமனதால்
தாங்கிப்பாசமூட்டி
எங்களது நலன்பேணி
எல்லோர்க்கும்
ஏற்ற தந்தையாய்
துணையாய் வழிகாட்டிய
அன்புத் திருப் பெருமானே
உங்களது பிரிவால்
நெஞ்சமது நொந்தோம்
உங்களது ஆத்ம சாந்திக்கு
நாளும் வேண்டுதல்
கொள்வோம் தினமும்

சாந்தி சாந்தி சாந்தி

**- மருமக்கள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைப்பில் மிதக்கும் நெஞ்சமுடன் பிஞ்சுகள் நாம்

தாத்தா நீங்கள்
சாமியிடம்
போய்வீட்டீர்களாம்
நாங்கள் உங்களை
மறக்க முடியவில்லை
தொட்டுத் தொட்டு
தூக்கித் தடவி
கட்டிப் பிடிச்சு
சிரிக்க வைப்பீர்கள்
நாங்கள் படிக்க
சிரிச்சு விளையாட
பார்த்துப் பார்த்து
சந்தோசப்படுவீர்கள்
எங்களுக்கு உங்களை
நினைக்க
அழுகை வருது
உங்களுக்காக
நாங்களும்
சாமியைக் கும்பிடுவோம்

- பேரப்பிள்ளைகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடை மனதாரே
# அரும் பிறப்பே

அன்புமிகு மனதால்
பண்புமிகு செயலால்
எங்களது மனமதில்
என்னாளும் தானானீர்
துன்பமது நாமிப்போ
அடைகின்றோம் அன்பரே
துணிவும் தூய நினைவும்
நாளுமாக யாவர்கும்
முன்னாகி நின்றே
மனமது நிறைந்த
நல்லிதய பெருமகனாரே
சாந்திபெற நாளும்
எங்களது வேண்டுதல்
நிதமாகும் சாந்தி சாந்தி சாந்தி

**- உற்றார், உறவினர், அன்பர், நண்பர்கள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயப் பொழிவு

அன்பே உருவான
எமது தந்தையார் பிரிவை
அறிந்ததும் தொலைபேசி வழி
நொந்திருந்த எமக்கு
ஆறுதல் தந்தோர்க்கும்
ஓடி வந்தணைத்து ஆறுதல்கூறி
சேர்ந்திருந்து இறுதிவரை
உதவிகள் புரிந்து உற்ற
துணையான பாசமனதார்க்கும்
இதயப் பொழிவாய்
எங்களது நன்றிதனைச்
சொரிந்தோம்

பொது நூலகம், நகராட்சி மன்றம், திருகோணமலை
Public Library, Urban Council, Trincomalee

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Office of the Leader of the Opposition
Floor, Parliament
Sri Jayewardenepura Kotte
Sri Lanka

ආර්. සම්බන්දන්, පා.ම.
இரா. சம்பந்தன், பா.உ.
R. Sampanthan, MP
විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கைப் பாராளுமன்றம்
Leader of the Opposition - Parliament of Sri Lanka

Telephones
Office | 011-2777257 / 011-2777256
Fax | 011-2777257 / 011-2777288
Residence | 011-2559782 / 076-2721878
Email

## எதிர்க்கட்சித் தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய கௌரவ இரா.சம்பந்தன் அவர்கள், திருகோணமலையின் மூத்த பத்திரிகையாளரான அமரர் திரு.சின்னையா குருநாதன் அவர்களின் மறைவு தொடர்பான நினைவு மலருக்கு வழங்கும் செய்தி

திருகோணமலையின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரும், தமிழ்ப் பற்றாளரும், தமிழ் மக்களின் விடுதலையின்பால் மிகுந்த அக்கறை கொண்டவருமான திரு.சின்னையா குருநாதன் அவர்களின் மறைவினையொட்டி வெளியிடப்படும் நினைவு மலருக்கு கனத்த இதயத்துடன் இச் செய்தியினை வழங்குகின்றேன்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் வாழிடமாகவும் கொண்டிருந்த கலாபூஷணம் திரு.குருநாதன் அவர்கள், திருக்கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் தனது கல்வியை மேற்கொண்ட பின்னர், 21வது வயதிலே ஊடகத்துறையில் தனது பணியை ஆரம்பித்திருந்தார். தினபதி, சிந்தாமணி, சூடாமணி, வீரகேசரி, தினக்குரல் மற்றும் உதயன் போன்ற தமிழ்ப் பத்திரிகைகளில் சிறப்புடன் பணியாற்றி வந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற உதயன் பத்திரிகையின் வார வெளியீடான சஞ்சீவி இதழின் ஆசிரியராகவும் அவர் சிறப்புடன் பணியாற்றினார். உள்ளூர் ஊடகங்களில் பணியாற்றி வந்த அதேவேளை, வெளிநாட்டுச் செய்தி ஊடகங்களுக்குச் செய்திகளை வழங்கும் பணியிலும் அன்னார் ஈடுபட்டு வந்தார்.

தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டுமல்லாது, ஆங்கிலப் பத்திரிகைகளான Sunday Observer, The Island, Sunday Times போன்ற பத்திரிகைகளிலும் கட்டுரைகளை எழுதியதன் மூலம் ஆங்கில மொழிமூல ஊடகப் பணியிலும் அவர் தடம் பதித்திருந்தார்.

2016 ஆம் ஆண்டு வரை 58 வருடங்களாக ஊடகத் துறையில் இடையறாது நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றி வந்த அன்னார், செய்திகளைச் சேகரிப்பதிலும் அவற்றைத் துரிதமாக மக்களிடையே கொண்டு சேர்ப்பதிலும் மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டார். நாட்டில் நிலவிய நெருக்கடியான சூழ்நிலைகளின்போதும் விரைவாகச் செய்திகளைச் சேகரிப்பதிலும், மக்களை அறிவூட்டும் வகையிலான செய்திகளுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றை வெளியிடுவதிலும் துரிதமாகப் பணியாற்றிய ஒருவராக அவர் விளங்கினார். ஊடகப்பணியை ஒரு தொழிலாகவன்றி ஆத்ம திருப்திக்கான பெரும் பணியாகவும் சமூகக் கடமையாகவும் கருதிச் செயற்பட்டார்.

தமிழ், ஆங்கில மொழிகளில் அவருக்கிருந்த ஆழ்ந்த அறிவும் ஆற்றலும், தான் சார்ந்திருந்த ஊடகத் துறையில் அவர் கொண்டிருந்த பட்டறிவும் அத்துறையில் அவரை ஒரு ஜாம்பவானாக சமூகத்தில் இனங்காட்டியிருந்தது. அவரது செய்திகளில் வாசகர்களைக் கவரத்தக்க சம்பவங்களும், சமூக அக்கறையும், பொதுவான மனித மாண்புகளும் விரவிக் கிடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சித் தலைவர் Office

Office of the Leader of the Opposition
Floor, Parliament
Sri Jayewardenepura Kotte
Sri Lanka

ආර්. සම්බන්දන්, පා.ම.
இரா. சம்பந்தன், பா.உ.
R. Sampanthan, MP
විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
எதிர்க்கட்சித் தலைவர் இலங்கை பாராளுமன்றம்
Leader of the Opposition - Parliament of Sri Lanka

Telephone
Office 011-2777353
011-2777356
Fax 011-2777257
011-2777255
Residence 011-2559767
011-2223836
Email

தமிழ் மக்களின் அரசியலைப் பொறுத்தவரையில், தந்தை செல்வாவின் காலம் தொடங்கி அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களின் காலத்திலும் தொடர்ந்த அன்னாரது அரசியல் கருத்துக்கள் அவர் இறக்கும் வரை உறுதிமிக்க ஒரே நிலைப்பாட்டிலேயே இருந்து வந்துள்ளது. அன்னாரது தனிப்பட்ட அரசியல் கருத்துக்கள் எவ்வாறு இருந்தபோதிலும், ஒரு பத்திரிகையாளனுக்கு இருக்க வேண்டிய நடுநிலையிலையின்றும் விலகாது பணியாற்றியமை அவரது உயர்ந்த குணாம்சமாகும்.

ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியிருந்த கலவர காலங்களிலும் தமது செய்திகளையும் கருத்துக்களையும் துணிவுடனும் ஊடக தர்மத்தின் அடிப்படையிலும் வெளியிட்டு வந்ததோடு, சட்டச் சிக்கல்களில் சிக்கிக் கொள்ளாமலும் தனது இறுதிக் காலம் வரை ஊடகப்பணியில் ஈடுபட்டிருந்தார்.

எனக்கும் அவருக்கும் இடையில் மிக நீண்டகாலமாக நெருக்கமான தொடர்பு இருந்து வந்துள்ளது. அரசியல் ரீதியான கருத்துக்களைக் கலந்துரையாடுவதுடன், நல்ல கருத்துக்களை எடுத்துரைத்து வந்திருந்தார். அத்தகைய அவரது கருத்துக்கள் எப்பொழுதும் பெறுமதி மிக்கவையாக அமைந்திருந்ததன் காரணமாக நான் அவரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்து அவற்றைப் பயன்மிகு வகையில் பயன்படுத்துவதில் அக்கறையாக இருந்து வந்துள்ளேன். அத்தகைய ஆளுமைமிக்க ஒரு பெருமகனாரது இழப்பு தனிப்பட்ட முறையில் எனக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது இரு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் ஊடகத்துறையில் அவருடன் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பிலும், தமிழ்மக்கள் சார்பிலும், எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சுகின்றேன்.

இரா. சம்பந்தன்

இரா.சம்பந்தன், பா.உ., திருகோணமலை மாவட்டம்
எதிர்க்கட்சித் தலைவர்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சி.குருநாதன்
## முன் மாதிரியான ஊடகவியலாளர்

பத்திரிகை தருமம் என்று வாயினால் மட்டும் சொல்வதில் இல்லாமல் செயலில் செயற்பட்ட செயல்வீரன். எட்டுத் திசையும் அவரது எழுத்தில் பற்றுக்கொண்டிருந்தது என்பதற்கு பல் வேறு அஞ்சலி நிகழ்வுகளும் கட்டுரைகளும் சான்றாகவுள்ளது. குடும் வாழ்வினிலும் அன்பும் பாசமும் கொண்டு வாழ்ந்து காட்டினார். தனது மனைவி ஆண் பெண் என இரண்டு பிள்ளைகளின் நாளாந்த கடமைகளை சீராகவே செய்த குடும்பத்தலைவன். பாடல் பெற்ற வரலாற்றுப் பெருமையுடைய திருக்கோணமலையின் கடலும், கோயில்களும் பெருமை பெற்று விளங்கும் வரை அமரர் குருநாதன் நாமம் தினமும் பேசப்படும் என்பதில் ஐயமில்லை. நாலுபேர் போல் வாழ்ந்து போ என சைவப்பெரியார்கள் கூறுவார்கள். நாலுபேர் என்பதின் உட்பொருள் திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், சுந்தரமுர்த்தி நாயனார் ஆகிய சமய குரவர்கள் நால்வரின் வாழ்வு நெறிமுறையில் வாழ வேண்டும் எனக் கூறுவதே அதன் கருப்பொருளாகும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமான் கடல் கடந்து வந்து திருக்கோணமலையில் கால்பதித்த நாளதில் இருந்து சைவ நெறி முறையான வாழ்வு மீதான தெளிவும் நம்பிக்கையும், உறுதியானது என உரமூட்டியது இளைஞர்களின் மனங்களில் அழமாய்ப் பதிந்து அதனுள் ஒருவராக அமரர் குருநாதனும் விளங்கினார்.

திருக்கோணமலையில் பிரபலம் படைத்த அமரர் ஆறுமுகம் அவர்களது வீட்டில் முதலாவது ஒன்று கூடலில் தவத்திரு குன்றகடி அடிகளாரின் விரிவான விளக்கவுரையினை கேட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து. அமரர் கந்தையா இராசநாயகி காந்தி ஜாயாவின் மனைவி அவர்களது தலைமையில் இளைஞர் அருள் நெறி மன்றம் உருவாகியது மன்றத்தின் இணைச்செயலாளர்களாக குருநாதனும், நானும் தெரிவு செய்யப்பட்டோம் என்பதில் எனக்கு ஓர் மகிழ்ச்சி.

அருள் நெறி மன்றத்தின் ஆரம்ப களப்பணியாக மார்கழி மாத திருவெம்பாவை நாட்களில் இரவு மூன்று மணிக்கு திருகோணமலை மாரியம்மன் கிணற்றில் நீராடி சுத்தமான உடையணிந்து அங்கிருந்து பஜனைக் குழுவினர் திருவெம்பாவைப் பாடிக் கொண்டு திருவிஸ்வ (சுவாமி) கோயிலையும், அதன் வழியாக கற்பக விநாயகர் கோயிலையும், வணங்கி கடற்காட்சி வீதி ஊடாக பிரதான வீதியினால் பஜனை தொடரும். அமரர் குருநாதன வீடு பிரதான வீதியில் அமைந்திருந்தது. குருநாதன் அவர்களின் தந்தையார் சின்னையா அந்த அதிகாலையில் "கோர்லிக்ஸ்" பானம் தந்து அனைவரையும உற்சாகப்படுத்துவார். ஆதனைத் தொடர்ந்து நடைபவனி திருக்கோணேசப் பெபருமான் கோயிலில் பஜனை நிறைவுபெறும் பதினெட்டு வயதிற்கு உட்பட்ட காலத்தில் இப்பணியை செய்தவர்களில் அமரர் குருநாதனும் முதன்மை பெறுவார்.

பத்திரிக்கைத் தொழிலினில் குருநாதன் அவர்களை ஈடுபடுவதற்கு முதல் வித்தினை விதைத்தவர் அமரர் இராமநாதன் என்ற பெரியார்.

திரு.விஸ்வநாத சுவாமி (சிவன்) கோயிலின் மணியகாரராக விளங்கிய அமரர் எஸ்.ரி.அரசு அவர்களின் மருமகனான அமரர் விமலசிறி அவர்களது ஸ்ரூடியோவில் நிர்வாகம் செய்யும் ஒருவராக பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாதன். அந்நாளில் அமரர் இராமநாதன் ஆங்கில செய்திதாள்களின் செய்தியாளராக கடமையாற்றினார். தனது கமராவால் எடுக்கும் படங்களை சுடச்சுட செய்திதாளுக்கு அனுப்புவார். அதற்கு உதவியாக குருநாதன் அவர்களின் பங்கு அமரர் இராமநாதன் அவர்களின் நண்பனாக உருவாகியது. குருநாதனின் எழுத்தாற்றல் ஆங்கில அறிவு கடமையை குறிப்பிட்ட நேரத்தில் நிறைவு செய்தல். அத்தோடு தட்டச்சின் ஊடாகமிக தெளிவாக வாசகர்கள் வாசிக்கத் தக்கவிதமாக செய்திகளை அழகாக உருவாக்குதல் ஆகிய திறமைகளை பயன்டுத்த வேண்டும் என்ற அவா அவரது உள்ளத்தில் பதிந்து விட்டது. அமரர் இராமநாதன் செய்தியாளராக ஆங்கில பத்திரிகையில் கடமையாற்றியுள்ளார். தனது கமராவால் பிடிக்கப்படும் படங்களை ஸ்ருடியோவில் படங்களாகப் பெற்று பத்திரிகைகளுக்கு அனுப்பி வருபவது அவரது கடமை அத்தொடர்பு காரணமாக அமரர் குருநாதனுடனும் நண்பராக பழகும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அமரர் குருநாதனின் ஆங்கில அறிவும் செய்திகளை வழிமுறையாக சுருக்கமாக தட்டச்சில் அச்சிட்டு வழங்கும் ஒழுக்கமான செயற்பாட்டின் உயர்தன்மையை அவதானித்த அவர் அமரர் குருநாதன் அவர்களை செய்தியாளராக வீரகேசரியில் இணைக்க வழிவகைகள் செய்தார். அதன்பின்னர் திருகோணமலையின் தமிழ் செய்திகள், வீரகோசரியில் நிறைய வருகின்ற ஓர் ெறற்காலமாக விளங்கியது. படங்களை உருவாக்கமாக தரும்நுட்பமும் விவேகமும் செய்திகளை அழகாக அச்சிட்டு அதனை தபால் உறையில் பக்குவமாக மடித்து வைத்து அதற்குரிய முத்திரைகளை ஒட்டிக் கொண்டு இரவு புகையிரத பிரயாணத்தை தொடர்வதற்கு முன்பாக அதனை நிர்வாகவிதி முறையுடன் செயற்பட்டு கடிதங்களை புகைவண்டியில் அனுப்பிவைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுள்ள தொடர்பு ஆரோக்கியமான விஞ்ஞான வழிமுறைகள் அன்று இல்லாத நிலையில் தொடர்பாடல்களை முன்னின்று செய்யும் யுக்தியினால் அதனை படைத்தார். வீரகேசரி என்ற செய்தியாளர் மட்டும் என்ற வட்டத்தில் இல்லாது வேறு ஆங்கில செய்திதாள்களிலும் தனது திறமையை நிலைநாட்டிய திருக்கோணமலை ஊடகவியாலாளர் என்ற பெருமை என்றும் எக்காலத்திலும் அவருக்கு நிகராக வேறுயாராலும் காண முடியாது.

செய்தியாளர் மட்டுமே என்று அவரது திறமையை குறுகிய வட்டத்தில் வட்டமிட முடியாது. அரசியல், சமூகப்பணி என்பவற்றிலும் அவரது உயர்வினை பாராட்டாமல் இருக்க முடியாது.

தலைசிறந்த தலைவர்களின் உயர் நிலையை உணர்த்தும் அரசியல் பேச்சு என்றாலும் அறிக்கைகள் என்றாலும் அழகாக வடிவமைத்து தலைவர்களால் ஆய்வு செய்யப்பட்ட உட்பொருளின் உயர்வாக மெருகூட்டும் பாங்கினை பக்குவமாகக் கொண்டு தனது கமமையை திறமையாகச் செய்தார். உயிரோடும் பாராட்டப்பெற்றார். மேன்மையான பெருமையுடன் அமரர் என்ற பெருமையுடன் என்றும் உலகினில் வாழ்வார்.

- **இ.சோமசுந்தரம்** J. P

- **முன்னாள் திருகோணமலை நகரசபை உறுப்பினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுக்குள் நிதமான நேர்மனதார்

ஆண்டது அறுபது
முன்னே நான்
கண்ட ஒருவரிருவரில்
அண்ணன் தம்பியாய்
உறவினில் இருவரும்
இணைப்பால் இணைந்தோம்

அன்னாள் திருக்கோண
மலையதில் பல நிலை
அரசியல் எழுத்துலகு
இன்னால் பேலில்லை
இதயத்துய்மையும் அர்ப்பணிப்பும்
முன்னோக்கியோர் காலமது

அன்னானில் அன்னார்
குருநாதன் ஊடகத்தின்
பன் முகப்படைப்பாளர்
தன் உணர்தனில்
என்னாளும் துணிவுடன்
முன்னான படைப்பாளி

ஆற்றல்தனை அறிந்து
போற்றிப் பாராட்டி ஊக்கம்
ஊட்டி உயர்வாக்கும்
உளப்பாங்கு உடையார்
அன்பதில் சேர்வார்
ஆனாலும் பிழைசரிக்கு
முன்நின்று போரிடுவார்
தன்நிலையில் தடுமாறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாள் இலக்கிய
நிகழ்வுகள் நாளுமாகும்
முன்னாகும் பெரிதாகும்
அங்கெலாம் குருநாதர்
தான் சென்றிடுவார்
தகுதிகண்டு கருத்திடுவார்
அவர் பணி யாவிலும்
அழமாய் பேர் புகழ்நோக்கான
புல்லிருவிகள் பேலின்றி
முளுநாளும் கலை இலக்கிய
வளர்ச்சிக்கு பொதுமையில்
முதல்மையாய் நின்றார்

இன்நாள் போல் தம்தலை
தானோங்க முகம்காட்டும்
தறிகெட்டார் போலன்றி
நெறி நிலை நின்று தூய
பண்பினில் பரந்திருந்தார்
அன்னார் குருநாதனார்

அன்னார் - தனின் சமூக
முன்னிலை நோக்கப்பணி
என்னாளும் மறந்திட
முடியாது சொல்லிடப்பல
பெரிதே உண்டு அவர்
காலத்தால் அழியா நினைவுப்
பதிவுக்குள் பரந்தவராவார்
துயரது தந்தார் பிரிவதால்
அனைவரும் ஆனோம்
அன்பர் நாதர் நினைவது
நிதமதுமானது எமக்கே

**கலாபூசணம் தம்பி தில்லை முகிலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநாதர் ஒரு கர்ம வீரன்

விடிமளவும் விளக்கனைய மாயை வடிவாகி கன்மத்து வந்து - திருவருட் பயன்

ஆன்மாக்கள் அவரவர் செய்த கர்மவினைகளின் பயனை அனுபவிப்பதற்கேதுவாக மாயையின் வடிவமாக தனு கரண புலன போகங்கள் வந்தமைகின்றது. இது சூரிய உதயம் வரை ஒளியினைக் கொடுக்கின்ற விளக்கை போன்றது. சூரிய உதயத்தின் பின் விளக்கின் ஒளி பயனற்றுப் போவதைப் போன்று தனு கரண புலன போகங்களை முறைப்படி பயன்படுத்தும் போது ஆன்மீக ஈடேற்றம் கிடைக்கப் பெறும்.

இந்த வகையில் திரு. குருநாதர் அவர்கள் அவருக்கு வாய்க்கப் பெற்ற மாயையின் வடிவமாகிய தனு கரண புலன போகங்களை முழுமையாக அர்ப்பணிப்புடன் பயன்படுத்தியதால் ஒரு கர்மவீரனாகிவிட்டார்.

இவர் எதுவித வெளிப்பகட்டோ, ஆடம்பரமோ இன்றி எளிமையாகவே வாழ்ந்து காட்டினார். அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டுமன்றி அனேகமானவர்களுக்கு அவரை ஒரு பத்திரிகையாளராக மட்டுமே தெரியும்.

திரு. குருநாதர் அவர்களுக்கு பல செய்திகளை மட்டும் பதிவு செய்து வாழ்வியலை நடாத்தியவர் அல்ல. வானொலியில் ஆங்கில செய்திகளைக் கேட்டு, நன்கு விளங்கி அதனைத் தமிழ்ப் பத்திரிகைகளில் எழுதுவதென்பது அபாரத் திறமை உள்ளவர்களுக்கே சாத்தியமாகும்.

அவ்வாறே ஆங்கிலப் பத்திரிகைகளில் கட்டுரைகளையும், செய்திகளையும் எழுதுவது என்பது ஆங்கிலத்தில் மொழிநடை அறிவும், இலக்கண அறிவும் உள்ளவர்களுக்கே சாத்தியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை நிருபர் என்ற போர்வைக்குள் வலிந்து தன்னைப் போர்த்துக் கொண்டு எளிமையாகத் தேசிய உடையில் நடமாடிய ஒரு அசாதாரணப் பிறவி அவர். ஆளுநரிலிருந்து அரச அதிகாரிகள் அனேகர் அவரிடம் இருந்து உதவி பெற்றிருக்கின்றார்கள். இவரது வீடு தேடி வந்து கடித உறையைக் கொடுத்து அதனை பிரசுரிக்குமாறு கேட்பார்கள்.

அரசியல் வாதிகள், ஆன்மீக வாதிகள், சமூக நலன் விரும்பிகள், அரசியல் சமூக கொடுமைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குரல் கொடுத்தவர் குருநாதர். அவருக்கு வாழ்வியலில் தேவைக்கேற்ப வருமானம் இல்லை. ஆனாலும், அவர் யாருக்கும் கடனாளியாக வாழவில்லை.

என்னுடன் அவர் தன்னுடைய அந்திய காலத்தில் சந்திக்கும் போதெல்லாம், "நான் யாருக்கும் பாரமாக இருக்க விரும்பவில்லை. எனக்கு திடீரென மரணம் நிகழுமா? " என்றே அடிக்கடி கேட்பார். மதிப்பிற்குரிய அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலக்கட்டம் தினபதிப் பத்திரிகையில் செய்தியொன்று வெளியானது. அதனைக் கண்டு ஆத்திரம் அடைந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. குருநாதர் அவர்களைத் தனது பணிமனைக்கு அழைத்து "இந்தச் செய்தியை வெளியிட உமக்கு யார் அனுமதி கொடுத்தது" என்று கேட்டார். அதற்கு குருநாதர் "நீங்கள் எப்போது தினபதி பத்திரிகைக்கு M.D ஆக வந்தீர்கள்" எனப் பதிற் கேள்வி கேட்டார்.

ஏன் அப்படிக் கேட்டீர்கள் என கேட்டதற்கு, "இக்கேள்வியை கேட்பதற்கு M.D க்கு மட்டும்தான் முடியும்" என்றார். எவராய் இருந்தாலும் தனது கேள்வியாலும், பதிலாலும் எத்தகைய அரசியல் மேதைகளையும் திணற வைத்த அமிர்தலிங்கம் அவர்கள் திரு.குருநாதர் அவர்களது பதிலால் அதிர்ந்து போய்விட்டார். குருநாதர் விடைப் பெற்றுச் சென்றதும் "இவர் போன்ற பத்திரிகையாளர்கள்தான் இன்று எமது இனத்திற்குத் தேவை " என்று அங்கிருந்தவர்களுக்கு கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் பதவியின் அதிகாரத்தை விட பத்திரிகை நிறுவனத்தின் அதிகாரம் உயர்வானது என்று தான் சார்ந்து நின்ற நிறுவனத்தை மேன்மைப்படுத்தியவர் திரு. குருநாதர். இவர் பத்திரிகைத் தர்மத்தை முழுமையாக பேணியவர்.

இந்நிகழ்வின் பின் திருகோணமலை முற்றவெளியில் திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கு மலர் கிரீடம் சூட்டி கௌரவப்படுத்திய நிகழ்வைப் பற்றிய செய்தியில் "அமிர்தலிங்கம் அவரது அரசியல் எதிரிகளுக்கு ஒரு இடி" என்று அவரைப் புகழ்ந்து பெரியதொரு கட்டுரையை பத்திரிகையில் எழுதியவர்.

இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயா அவர்கள், திரு குருநாதர் அவர்களின் மரண அஞ்சலியின் போது குருநாதரின் மறைவு தனக்கு தனிப்பட்ட முறையில் ஒரு பேரிழப்பு என்று கூறியிருந்தார். மேலும் அவரிடம் இருந்து பல அரசியல் ஆலோசனைகளையும் பெற்றிருந்தேன் என்றும் கூறியிருந்தார்.

ஸ்ரீ

திருமலை மக்கள் செய்த தவறு திரு. குருநாதர் அவர்களை ஒரு அரசியல் வாதி ஆக்கத் தவறியமையே. அவர் அரசியலில் பிரவேசித்திருந்தால் பாராளுமன்றமே அதிர்ந்து போயிருக்கும். அனைவரினாலும் கறிவேப்பிலையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டார்.

அவர் வாழ்வின் சுவையான சம்பவம். தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்களிடம் தோற்றுப் போனதுதான். தேசியத் தலைவர் 3 வருட காலம் தமிழ் நாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வருகிறார். அவரை உதயன் பத்திரிகை நிறுவனத்திலே பேட்டி காண்கின்றார்கள். குருநாதரின் கேள்வி "நீங்கள் 3 வருடத்திற்குப் பின் இந்தியாவிலிருந்து வந்திருக்கின்றீர்கள். இதேவேளை பலர் இந்த நாட்டை விட்டு ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நாட்டிலே பிரச்சினை தீர்ந்து அனைவரும் திரும்பி வருவார்கள். நாங்கள் சொல்ல முடியாத துன்பங்களுக்கு மத்தியில் பத்திரிகைளை நடாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தை ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றோம். ஓடிப்போனவர்கள் திரும்பி வந்து பணத்தைக் கொட்டி பத்திரிகையை நடாத்துவார்கள். அபபோது நீங்கள் எமக்காக என்ன செய்வீர்கள்?"

அதற்குத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பதில் "நீங்கள் தமிழ் இனத்தின் விடியலிற்காகப் பாடுபடுகின்றீர்கள். அதற்காக தனிப்பட்ட பிரதி பலன்களை எதிர்ப்பார்க்கக் கூடாது. உங்கள் திறமையைப் பயன்படுத்தி ..... வெற்றியை காண வேண்டியதுதான்" தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரனிடம் குருநாதர் தோற்றுப்போன இடம் இதுதான்.

போராட்ட நடவடிக்கைகளினால் மக்கள் விரக்தியும், வேதனையும் அடைந்திருந்த கால கட்டத்தில் அவரது பொறுப்பில் வெளியான வார வெளியீடு "சஞ்சீவி" வாராந்தம் தமிழ் மக்களுக்கு சஞ்சீவியாகவே இருந்தது.

ஒருவன் எத்தொழிலைச் செய்தாலும் கடமையுணர்வுடனும், அர்ப்பணிப்புடனும் செய்வாராயின் அது கர்ம யோகமாகும். குருநாதர் ஒரு கர்ம வீரன். அவர் பிரிவு எமக்கு பேரிழப்பாகும்.

ஏ.சோதிலிங்கம்
பத்திரிகையாளர், முன்னாள் திருகோணமலை
நகரசபை செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையின் கட்சி முதல் தம்பியின் படைவரை அவரது சேவை மதிக்கப்படும் இடத்திலே இருந்துள்ளது

திருக்கோணமலை மாவட்டம் தமிழ் மக்களைப்பொறுத்தவரையில் மிக முக்கியமான மாவட்டமாகும். அதனடிப்படையில் வரலாற்று ரீதியாக பல்வேறு சிறப்பைக்கொண்ட இடமான திருகோணமலையின், ஊடகவரலாற்றில் மிக முக்கியமானவராக அமரர் "வாழ்நாள் சாதனையாளர் சின்னையா குருநாதன் இடம் பிடித்துள்ளார்.

பழகுவதற்கும் பேசுவதற்கும் முன்மாதிரியாக செயற்பட்ட இவருடன் செயற்பட கிடைத்தமையை பெருமையாக கொள்கின்றேன்.பல்வேறு வகையிலும் என்னுடன் நெருங்கியும் வெளிப்படையாகவும் செயற்பட்டதன் காரணத்தினால் அவர்தொடர்பான பல விடயங்கள் அழியாத நினைவுகளாக உள்ளன.

அவர் ஊடகம்,அன்மீகம்,அரசியல்,போன்ற பல விடயங்களில் தனது முக்கியமான வரலாற்றுப்பங்களிப்பை வழங்கியவர் என்றால் அது மிகையாகாது. ஊடகத்தை தனது பிரதான வாழ்வாதார தொழிலாக கொண்ட சிரேஸ்ரட ஊடகவியலாளரான குருநாதனின் சிறப்பு ஆங்கிலப்புலமை,57 வருடங்களுக்குமேல் ஊடக சேவை மற்றும் சிறந்த கிரகித்தல் தன்மையுமாகும்.அத்துடன் "வாழ்நாள் சாதனையாளர்" பட்டம் பெற்ற திருகோணமலையின் முதல் ஊடகவியலாளருமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஊடக வாழ்வில் **ஆன்மீக ரீதியாக** பல பங்களிப்பை நல்கியமை நினைவில் உள்ளது. திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்று முக்கியமான கும்பாபிஷேகத்தை செய்தியாக்கியமை முதல் தனது செய்தியாக்கத்தில் ஆலயங்களின் தெய்வீக மகோன் மைத்துவத்தின் மாண்பினை வெளிப்பாக்கும் அருள் பணியில் உளமார பங்களித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையில் நான் துணைப்பொதுச்செயலாளராக இருந்த காலத்தில் அவ்வமைபினால் வெளியிடப்பட்ட காலாண்டு சிவநெறிசஞ்சிகையின் பணி தொடர்பாக நெருங்கிய தொடர்பை கொண்டிருந்தேன்.அப்போது அச்சஞ்சிகையின் ஆசிரியராக குருநாதன் பணியாற்றி சேவைபுரிந்தார்.

**ஊடகத்துறை**யைப்பொறுத்தவரை இலங்கை தமிழ் ஊடகவியலாளர்சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும்,பல ஆங்கில ஊடகங்களில் செய்தியாளராகவும் இருந்துள்ளார். ஊடக ஜம்பவான் எஸ்.ஜே.வி .தேவநாயகம் அவருடனும் நெருங்கி பணியாற்றியவர். இலத்திரனியலில் புகுந்து தமிழ் நெற் இணையத்தளத்தில் முக்கிய பங்கு வகித்தார். இவர், இதன்காரணமாக ஊடக ஜம்பவான் மாமனிதர் சிவராமுடன் நெருங்கிப்பணியாற்றினார்.இதற்கு இவரது ஊடக அனுபவமும் ஆங்கிலப்புலமையுமே வித்திட்டது.

**அரசியல்** தளத்தைப்பொறுத்தவரை எதிர்கட்சித்தலைவர் மாண்புமிகு இரா சம்பந்தர் ஐயா அவர்களுடன் நெருக்கமாக செயற்பட்டார். அவ்வப்போது பல அரசியல் ஆலோசனைக் கருத்துக்களையும் அவருக்கு வழங்கியதுடன் அவருக்கு எழுத்து துறைசார் அரசியல் பங்களிப்பையும் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஊடகங்களுக்கு அவர் ஏணியாக செயற்பட்டு கொள்கைப்பிடிப்புடன் பணியாற்றினார்.தினக்குரல் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதன்முக்கிய செய்தியாளராக இவர் செயற்பட்டார்.

வடகிழக்கு தமிழ் மக்களை அதிகம் கருத்தில் கொண்டு செயற்பட்ட இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது.

யுத்தகாலத்தில் பல நெருக்கடிகளுக்கும் பல பொருளாதாரப்பிரச்சனைக்கு மத்தியிலும் யாழ்மாவட்டத்தில் பணியாற்றிய இவர் "தந்தைமுதல் தம்பிவரை" என்ற தனது அனுபவக்கட்டுரையில் தானிப்பட்ட தனது சிரமங்களையும் அனுபவங்களையும் வெளிக்கொணர்ந்திருந்தார். அதாவது தந்தை செல்வாமுதல் தம்பி பிரபாகரன் வரை அவரது செய்தி பணி அனுபவங்கள் பற்றி எழுதியிருந்தார். தனிப்பட்டமுறையில் எம்முடனும் பகிர்ந்தும் இருந்தார்.

பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். சிவராம் அவர்கள் என்னையும் அவரையும் மாவட்டத்தில் செய்தி தொகுப்பில் பங்களிக்கும் தொடர்பையும் ஏற்படுத்தி தந்திருந்தார். நான் களப்பணியில் செய்திசேகரித்து இவருக்கு அனுப்புவேன். அவ்வாறான காலத்திலும் தனிப்பட்ட நெருக்கம் காரணமாகவும் அடிக்கடி என்னுடன் நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் உரையாடுவார்.

அவ்வாறு உரையாடும் போது 'ஐயா நான் குருநாதன் பேசுகிறேன்" என்றே கௌரவமாக என்னையும் தொலைபேசியில் பண்பாக அழைப்பார். அவரிலும் 20 வயதிற்கு மேல் இழையவன். அவர் மூத்த ஊடகவியலாளன் என்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் பண்பாக உரையாடுவார்.இவ்வாறான இவரது பண்பு பலராலும் அஞ்சலிக்கூட்டங்களில் நினைவு படுத்தப்பட்டிருந்தது. இதனடிப்படையிலும் இவர் முன்மாதிரியாகவே செயற்பட்டிருந்தார். இறுதிக்காலத்தில் பல ஊடக நிறுவனங்கள் அவரது உழைப்பிற்கேற்ற மற்றும் அனுபவத்திற்கேற்ற பொருளாதார உதவிகளை செய்யாது நெருக்கடியை கொடுத்தமையும் துரதிஸ்டவசமாக நடந்தது.

அவ்வாறான சந்தர்பங்களில் அவர்தனது நிலமைகளை குறித்தது வெளிப்படையாக கருத்துக்களை மனம்திறந்து பேசுவார். அதனால் அவர் உளவியல் ரிதியாகவும் பாதிக்கப்பட்டிருந்தார். என்பது என்போன்றவர்களுக்கு பெரும் கவலையைதந்தது. அவரது கவலையில் பங்களிக்கவும் அவரது நீண்டகால அப்பளுக்கற்ற சேவையை பாராட்டு முகமாகவும் நானும் நண்பர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம், சக ஊடகர் அ.அச்சுதனும் இணைந்து ஒரு குழுவாக செயற்பட்டு கல்வி மான்கள் சார்பில் இந்துக்கல்லூரி அதிபர் செ.பத்மசீலன், ஓய்வுபெற்ற விக்னேஸ்வரா பெருந்தெரு வித்தியாலய அதிபர் இராஜநாதன் அவர்களையும் இணைத்துக் கொண்டு ஒரு (52 வருட ஊடக சேவையை) பாராட்டு விழாவையும் திருகோணமலை ஸ்ரீ இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடப்பித்தோம்.

அதன்போது அவருக்கு பொற்கிளியும் வழங்கி நினைவுக்குறிப்பையும் வெளியிட்டிருந்தோம். அது அவருக்கு சற்று ஆறுதலைத்தந்திருந்தது. ஆனாலும் அவரது சுமையில் பெரும் பங்களிப்பை வழங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையுடன் 100 வீதம் ஊடகசேவையில் ஆன்ம திருப்தியுடன் பங்களித்த அந்த ஆத்மாவிற்கு ஊடக ஜம்பவானுக்கு,வாழ்நாள் சாதனையாளனுக்கு, சமூகத்தின் பங்களிப்பு அவசியமானதாக இருந்தது.

அது அவரால் பயன்பெற்ற அரசியல் குழுக்கள், அமைப்புக்களால் ஏன் உணரப்படாமல் போனது? என்பது வேதனையான வினாவாகும். இவ்வாறான சூழல் ஏற்பட்டமை துராதிஸட வசமானதமாகும்.

எது எப்படியாகினும் திருகோணமலை மற்றும் இலங்கையின் தமிழ் ஊடகவியலாளர்கள் வரலாற்றில் உச்சத்தில் இருந்து அவரை யாராலும் இறக்கிவிட முடியாது.தந்தையின் கட்சி முதல் தம்பியின் படைவரை அவரது சேவை மதிக்கப்படும் இடத்திலே இருந்துள்ளது என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்திற்கும் ஊடகத்துறைக்கும் அவரது இழப்பு பெரும் பேரிழப்பாகும். இவரது அனுபவத்தில் காரணமாக எதிர்கால ஊடகத்துறையும் சமூகமும் நிற்சயம் பாடங்களைக்கற்றுக்கொள்ளும் எனபது திண்ணமாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர்
வானுறையும் தெய்வத்துள்வைக்கப்படுவர்"

**நன்றி**
**சிரேஸ்ர ஊடகவியலாளன்,**
**மனித உரிமைகள் செயற்பாட்டாளன்**
**பொன்னுத்துரை சற்சிவானந்தம்**
**248,இலிங்கநகர்,திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு கீர்த்தனம் கரு வாக்கிய தந்தையின்

நண்பர் கலாபூசணம் தம்பி தில்லை முகிலன்

ஐயா அவர்கட்கும், வடிவமைத்து

நிலையுயர்த்தி தந்துதவிய

A.R. அச்சகத்தார்கும் அன்புடன் பணிவுமிக்க

மனம்சேர் நன்றி நவின்றோம் நாம்

**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

குருகீர்த்தன மதில் எம் தந்தையார் தனின்
வாழ்விருப்பிப் பல நிலைமை வெளிப்பாக்கி
எமக்கு பெருமையும் ஆறுதலும் சேர்ந்த
எமதினத்தின் மாதலைவரும்
பெரும் மனதாருமாகிய மாண்பு மிகு
பெருந்தனை சம்பந்தர் ஐயா அவர்கட்கும்
அத்தோடு எமது தந்தையார்
முன்னாள் நிலை ஊடகசமூகப்பங்களிப்பு
அர்ப்பணிப்புகளை வெளிப்படுத்திய நண்பின்
ஊடகத்துறையில் சமூக செயலில்
எழுத்துறையில் இணைந்திருந்த திருவாளர்
அவனைவர்க்கும் எங்களது மனமார்ந்த
நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் தொழில் எழுத்து
அவள் தொழில் நெசவு
என்ன பொருத்தம்

என் தொழில் சொன்ன பொழுது
அவள் மகிழ்ந்தாள் என்பது
இன்னும் நினைவில் இருக்கிறது

என் பலமும் பலவீனமும்
ஞாபகசக்தி
அவளை நினைக்கும் போது
சக்தி வருகின்றது – அவள் இல்லையென்று
நினைத்தால் நான் இல்லாது போவதாக
உணர்கின்றேன்

இல்லாள் அவள்
ஒரு நாளும் என்னுடன்
இல்லாது போகாள்

**சி. குருநாதன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org